# NEWSLETTER

**December 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569









தொடர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதேச செயலகங்களினூடாக கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுக்கமைவாக வெள்ள நிவாரணப் பொதிகளை வழங்கும் செயற்பாட்டினை நாம் முன்னெடுத்திருந்தோம். இதன் இரண்டாவது கட்டமாக செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கணபதிப்பிள்ளை புதிய நகரம் மற்றும் பிள்ளையாரடி வட்டாரம் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் பிரதேச செயலகங்களின் ஊடாக,

- மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலகம்
  - கற்பானைக்குளம் – 70 குடும்பங்கள்

- மட்டக்களப்பு ஏறாவூர் பற்று (செங்கலடி) பிரதேச செயலகம்
  - பன்குடா வெளி – 80 குடும்பங்கள்
  - செங்கலடி 01 – 20 குடும்பங்கள்
  - கணபதிப்பிள்ளை புதிய நகரம் – 100 குடும்பங்கள்
  - பிள்ளையாரடி வட்டாரம் – – 108 குடும்பங்கள்

- மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலகம்
  - மாவிலங்கன்துறை – 150 குடும்பங்கள்

- முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்
  - புதுக்குடியிருப்பு – 50 குடும்பங்கள்
  - முங்கிலாறு – 50 குடும்பங்கள் என மொத்தமாக 628 குடும்பங்களுக்கான உதவி வழங்கப்பட்டது.





# Top news

## விவேகானந்த குடும்பத்தினரின் வருட இறுதி நிகழ்வு







எமது விவேகானந்த குடும்பத்தின் அமைப்புகள் அனைத்தும் சமூகத்தின் அடிப்படை தேவைகளை கருத்திற்கொண்டு சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை உருவாக்கும் வகையில் ஒவ்வொரு செயற்பாடும் தனிமனித வலுவூட்டலின் அடிப்படையில் சமூகத்தின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.













இறைவணக்கம் மற்றும் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமை உரையை அடுத்து ஒவ்வொரு அமைப்பும் தமது கடந்த ஆண்டின் செயற்திறன், சவால்கள் மற்றும் சாதனைகளை விளக்கி, எதிர்வரும் ஆண்டுக்கான திட்டங்களை முன்வைத்ததோடு. இதில், விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை மற்றும் அமிர்தா நிறுவனங்களின் செயற்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டது.







# மாவிலங்கத்துறையின் மாணவர்களுக்கான கௌரவிப்பு

மாவிலங்கத்துறையின் ஆலய நிர்வாகமானது பாடசாலையின் பழைய மாணவர் குழுவுடன் இணைந்து கல்வி, விளையாட்டு மற்றும் பிரத்தியேக செயற்பாடுகளில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் வண்ணம் அதற்கான நிகழ்வினை பாடசாலை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடாத்தினர். இந்த விழா மாணவர்களின் சாதனைகளை பாராட்டுவதுடன் மட்டுமன்றி இக்கிராமத்தினரின் ஒற்றுமையைப் பலப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.










குறிப்பாகக் க.பொ.த சாதாரண தரத்தில் சிறப்பாக சித்தியடைந்த மாணவர்கள், சுற்றாடல் பாதுகாப்புக்குழு சார்பில் ஜனாதிபதி விருதினை பெற்ற மாணவி, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த மாணவர்கள், கரம் விளையாட்டில் தேசிய ரீதியில் பங்கேற்ற மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலையின் வளர்ச்சிக்காக தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். கிராமத்தின் சமூக மேம்பாட்டில் இந்நிகழ்வு முக்கிய பங்கு வகிக்கின்றமை சிறப்பானதாகும். இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் 80% இற்கும் மேல் சித்தியடைந்தமை கல்வி வளர்ச்சியின் முக்கிய முன்னேற்றமாகும்.





## தன்னார்வ தொண்டர்களுடனான வருடாந்த கலந்துரையாடல்

எமது அறக்கட்டளையுடன் இணைந்து பணியாற்றும் அறக்கட்டளையின் தன்னார்வ தொண்டர்களுடனான வருடாந்த கலந்துரையாடல் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் 13.12.2024 அன்று இடம்பெற்றது. இவ்வருடத்திற்கான செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டலை அடுத்து எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாடுகள் பற்றியும் அறக்கட்டளையுடனான அவர்களின் பயணம் தொடர்பிலும் தெளிவாகக் கலந்துரையாடப்பட்டது.




## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

எமது பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த கலந்துரையாடல் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் கொம்மாதுறை கிளையில் 16.12.2024 அன்று இடம்பெற்றது. இவ்வருடத்திற்கான செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டலை அடுத்து எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு அவர்களுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டது.

இவ்வருடம் கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு மயிலம்பாவெளி வாழும் கலை ஆசிரமத்தில் வசிக்கும் சிறுமிகளுக்கான புதிய ஆடைகள் மற்றும் கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இச்செயற்பாடானது, திரு.ரெஜி ராஜரெட்ணம் மற்றும் திருமதி.பிரின்சி ராஜரெட்ணம் அவர்களின் நினைவாக, இலண்டனில் வசிக்கும் திரு.ஜெரி ராஜரெட்ணம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் வசிக்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் 23.12.2024 அன்று வழங்கப்பட்டது. கனடாவைச் சேர்ந்த திருமதி.பத்மாவதி யோகேஸ்வரன் அவர்கள் எமது அறக்கட்டளையினூடாக தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.












அவ்வாறே, ஜீவானந்தா மகளிர் இல்லத்தில் வசிக்கும் மாணவர்களுக்கான இனிப்புப் பண்டங்கள் 24.12.2024 அன்று வழங்கப்பட்டது. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த திரு.ரமேஸ் பிரசாத் அவர்கள் எமது அறக்கட்டளையினூடாக தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் மார்கழி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



